OS. 39/2014

நாள். 13.10.2022

**வா.சா. 1 –** வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முத்துராமு என்பவர் ஒத்தி மீட்பதற்கு வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த சொத்தை முத்துராமு வெள்ளைச்சாமிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது மோசடியாக கிரயம்கொடுத்த ஆவணம் என்பதால் நீதிமன்றம் மூலம் அந்த கிரய ஆவணம் ரத்தாகிவிட்டது. நீதிமன்றம் அந்த ஆவணத்தை ரத்து செய்ததற்கான தீர்ப்பு நகலை தாக்கல் செய்துள்ளேன். முத்துராமு பெயரில் போட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்மீது வெள்ளைச்சாமி அப்பீல் போட்டார் என்றால் அந்த விவரத்தை பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரங்களை நான் வக்கீல் மூலம் படிக்கக்கேட்டு தெரிந்துகொண்டேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 3ம் பிரதிவாதியின் தந்தை வெள்ளைச்சாமி என்பவர் உயர்நீதிமன்றத்தில் S.A.No.1599/1995 மேல்முறையீடு செய்து அவர் பெற்ற கிரயம் செல்லும் என்று தீர்ப்புரை பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 2வது மேல்முறையீட்டில் முத்துராமுவின் வாரிசாக என் தாயார் வெயிலம்மாளை காட்டி தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். துரைராஜ் என்பவர் இந்த சொத்தில் ரெங்கசாமி என்பவரிடம் உழவடைதாரராக இருந்து சொத்தினை அனுபவம் செய்து வந்ததாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. அவர் முத்துராமு, வெள்ளைச்சாமி, ரெங்கசாமி ஆகீயோர் பெயரில் வழக்கு தாக்கல் செய்து அவரை சொத்தின் அனுபவத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று O.S.No.155/1978 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் அவருக்கு பாதகமாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அந்த தீர்ப்புக்கு எதிராக A.S.No.74/1982 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்து அதில் துரைராசுக்கு சாதகமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட விவரம் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டிருப்பதை நான் தெரிந்து

கொண்டேன். துரைராஜ் தாக்கல் செய்த வழக்கு விவரம், வெள்ளைச்சாமி தாக்கல் செய்த வழக்கு விவரம், முத்துராமு தாக்கல் செய்த வழக்கு விவரம் ஆகியவை அனைத்தும் உண்மைதானா என்பதை ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா முத்துராமு ஒத்திமீட்பு தீர்ப்பை பெற்ற பிறகு அச்சொத்தை ரெங்கசாமி வகையாறாவிடமிருந்து முத்துராமு நீதிமன்றம் மூலம் ஒப்படைப்பு பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. ஒப்படைப்பு பெறுவதற்கு வெள்ளைச்சாமி தான் மனுதாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. வெள்ளைச்சாமி ஒப்படைப்பு மனுதாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குண்டான ஒப்படைப்பு ஆவணங்களை தேடிப்பார்த்துத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வெள்ளைச்சாமி ஒப்படைப்பு நடவடிக்கைகளில் ஒப்படைப்பு பெறுவதற்கு முன்பாகவே துரைராஜ் என்பவர் சொத்துக்களின் குத்தகைதாரர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் அந்த விவரத்தை ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். முத்துராமு, வெள்ளைச்சாமி மற்றும் முத்துராமு மூலமாக உரிமைகோரும் நபர்கள் மூலமாக நீதிமன்றம் மூலமாக சொத்தினை இன்று வரை ஒப்படைப்பு பெறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகளாகிய நாங்கள் நீதிமன்றம் மூலம் ஒப்படைப்பு பெறுவதற்கு நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. எங்களிடம் சொத்தின் அனுபவத்தை முத்துராமு தான் வழக்கு தாக்கல் செய்து வெற்றிபெற்று சொத்தினை எங்களிடம் ஒப்படைத்தார். வழக்குரையில் சொல்லியுள்ள படி தாவா சொத்தை எங்களிடம் யாரும் ஒப்படைக்கவில்லை என்றும் துரைராஜ் சொத்தினை அனுபவம் செய்துவந்து அவர் ரெங்கசாமி வகையறாவிடம் சொத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எங்கள் அப்பா மற்றும் சித்தாப்பா பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு காரணம் எதுவும் இல்லை. பட்டா ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றும் சொத்தின் அனுபவத்தில் வாதிகள் இருந்து வருவதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. ரெங்கசாமி என்பவரின் வாரிசுகளான பூபாலன் வகையறாவிடமிருந்து 1ம் பிரதிவாதி அதிகார பத்திரம் பெற்று 2ம் பிரதிவாதி

இராமச்சந்திரன் என்பவருக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அந்த விவரத்தை ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். முத்துராமு வெள்ளைச்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் செல்லாது என்றும் எங்களை கட்டுப்படுத்தாது என்றும் வாதிகளாகிய நாங்கள் நீதிமன்ற நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் தாத்தா முத்துராமு நடவடிக்கை எடுத்ததால் நாங்கள் தனியாக நடவடிக்கை எடுக்கவில்லை. எங்கள் தாத்தா முத்துராமு எடுத்த வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். அதன் மீது மேல்முறையீடு ஏற்பட்டு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தும் என்றால் எங்கள் தாத்தா நடத்தியிருந்தால் அது எங்களை கட்டுப்படுத்தும். தற்போது சாட்சி என் தாத்தா நடத்தியிருந்தாலும், வேறு யார் நடத்தியிருந்தாலும் அந்த தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தாது. உயர்நீதிமன்ற தீர்ப்புக்கும் எங்களுக்கும் சம்மந்தம் ஏதும் இல்லை. என் தாத்தா இறந்த பிறகு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு சென்று அந்த வழக்கில் நாங்களும் சேர்ந்து கொண்டு மேல்நடத்த நடவடிக்கை எடுத்தோமா என்றால் அதற்கு அவசியம் இல்லை. தற்போது சாட்சி அந்த சமயத்தில் எங்களுக்கு விவரம் தெரியாது என்பதால் அந்த நடவடிக்கையை நாங்கள் எடுக்கவில்லை. முத்துராமு வழக்கு தாக்கல் செய்து ஏற்பட்ட தீர்ப்பின் பேரில் ஏற்பட்ட மேல்முறையீடு, 2ம் மேல்முறையீடு ஆகியவை வாதிகளுக்கு தெரியும் என்றும் 2ம் மேல்முறையீட்டில் எங்களது தாயார் எங்களுக்காக நடவடிக்கைகள் செய்த விவரம் தெரியும் என்றும் தற்போது இந்த வழக்கிற்காக மேற்படி நடவடிக்கைகள் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளில் நாங்கள் சொல்லியுள்ள உயில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. தற்போது தான் முதன் முதலாக தாக்கல் செய்யப்படுகிறது. நீதிமன்ற நடவடிக்கைக்கு பிறகு தாவா சொத்தில் உள்ள விறகளை யாரோ ஒருவர் வெட்டியதால் அது சம்மந்தமாக ஏற்பட்ட காவல் துறை நடவடிக்கைகளில் அதை நாங்கள் காண்பித்தோம். முத்துவெயிலு உயில் எழுதிவைத்தது பற்றி எங்களுக்கு தெரியாது. அந்த உயிலின் 2 சாட்சிகளில் சாட்சி வெள்ளைச்சாமி என்பவரை தெரியும். வெள்ளைச்சாமி என்பவர் ஆறுமுகத்தின் தகப்பனார் ஆவார். நாங்கள் குறிப்பிடும் ஒத்தியின் பேரில் சொத்து எந்த காலத்திலும் திருப்பப்படாததால் ஒத்திமீட்பு உரிமை காலவரம்புசட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முத்துராமு

வெள்ளைச்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தை நாங்கள் உரிய காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்து கொள்ளவில்லை என்பதால் தாவா சொத்தில் உள்ள உரிமையையும் நாங்கள் இழந்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. சொத்தின் அனுபவத்தை எங்களிடம் ஒப்படைத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. ஒத்தி வைத்த காலத்திலிருந்து இன்று வரையிலும் தாவா சொத்து வாதிகள் மற்றும் அவர்களது முன்னோர்கள் அனுபவத்தில் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்லி நீதிமன்றத்தில் இந்த வழக்கில் இடைக்காலஉறுத்துக்கட்டளை உத்தரவு கேட்டு மனுதாக்கல் செய்ததில் உரிய விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இல்லாததால் தான் உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்யாததை மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தற்போது அதுபற்றி தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும் பட்டா ஏற்படுத்தியதாகவும், வரி செலுத்தியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் கண்ட பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் 2ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரயமும் 4, 5 பிரதிவாதிகள் பெற்ற கிரயமும், 3ம்பிரதிவாதி எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணமும் செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள குறுக்கு விசாரணையை கூடுதல் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு 2ம் பிரதிவாதி தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)